www.Padasalai.Net www.TrbTnpsc.com



# SHRI KRISHNA ACADEMY

NEET,JEE AND BOARD EXAM COACHING CENTRE
SBM SCHOOL CAMPUS,TRICHY MAIN ROAD,NAMAKKAL
CELL:9965531727-9443231727

## பகுதி – I – பொதுத்தமிழ்
## Language – part I – TAMIL

வகுப்பு : XII மதிப்பெண்கள் : 90
நாள்: முழுத்தேர்வு - 1 காலம் : 2.30 மணி

---

அறிவுரைகள்: 1. அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளதா என்பதனைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்
2. நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிகோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

குறிப்பு: 1. விடைகள் தெளிவாகவும் குறிப்பிட்ட அளவினதாகவும் சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.
2. கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்து; குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுத வேண்டும்.

**I. பலவுள் தெரிக. (அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.)** 6x1=6

1. “மீண்டுமந்தப் பழமைநலம் புதுக்கு தற்கு” கவிஞர் குறிப்பிடும் பழமைநலம்.
   க) பாண்டியரின் சங்கத்தில் கொலுவிருந்தது
   உ) பொதிகையில் தோன்றியது
   ங) வள்ளல்களைத் தந்தது
   அ) க மட்டும் சரி ஆ) க, உ இரண்டும் சரி
   இ) ங மட்டும் சரி ஈ) க,ங இரண்டும் சரி
2. வையகமும் வானகமும் ஆற்றலரிது - எதற்கு?
   அ) செய்யாமல் செய்த உதவி ஆ) பயன்தூக்கார் செய்த உதவி
   இ) தினைத்துணை நன்றி ஈ) செய்ந்நன்றி
3. சிறுபாணாற்றுப்படையின் பாட்டுடைத்தலைவனின் இன்றைய நிலப்பகுதி
   அ) உதகமண்டலம் ஆ) விழுப்புரம் இ) திண்டிவனம் ஈ) தருமபுரி
4. வேறுபட்டதைக் குறிப்பிடுக.
   அ) அண்மைக் காட்சித் துணிப்பு ஆ) சேய்மைக் காட்சித் துணிப்பு
   இ) நடுக் காட்சித் துணிப்பு ஈ) காட்சி மறைவு
5. சுவடியோடு பொருந்தாத ஒன்றைத் தேர்வு செய்க.
   அ) வசம்பு ஆ) மணத்தக்காளியிலைச் சாறு
   இ) கடுக்காய் ஈ) மாவிலைக்கரி
6. உலக நாடுகள் மாற்று ஆற்றலை நோக்கிச் சென்றால் மட்டுமே புவி வெப்பமயமாதலைக் கட்டுப்படுத்த முடியும். இத்தொடர் உணர்த்துவது
   அ) கார்பன் அற்ற ஆற்றல் பயன்பாடே தேவையாகிறது.
   ஆ) பசுமைக்குடில் வாயுக்கள் அதிகமாகிறது.
   இ) காலநிலை மாறுபடுகிறது
   ஈ) புவியின் இயக்கம் வேறுபடுகிறது.

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

**II. அனைத்து வினாக்களுக்கும் விடை தருக** 8x1=8

7. சரியான நிறுத்தற்குறியுடைய தொடரைக் கண்டறிக.

அ) சிந்துவெளிநாகரிகம் பற்றித் தமிழில் முதன்முதலில் “மொஹெஞ்சொ-தரோ அல்லது சிந்துவெளி நாகரிகம்” என்ற நூலை இயற்றியவர் மா. இராசமாணிக்கனார்.

ஆ) சிந்துவெளிநாகரிகம் பற்றித் தமிழில் முதன்முதலில் ‘மொஹெஞ்சொ-தரோ அல்லது சிந்துவெளி நாகரிகம்’ என்ற நூலை இயற்றியவர் மா. இராசமாணிக்கனார்.

இ) சிந்துவெளிநாகரிகம் பற்றித் தமிழில் முதன்முதலில் மொஹெஞ்சொ-தரோ அல்லது சிந்துவெளி நாகரிகம் என்ற நூலை இயற்றியவர் மா. இராசமாணிக்கனார்.

ஈ) “சிந்துவெளிநாகரிகம் பற்றித் தமிழில் முதன்முதலில் ‘மொஹெஞ்சொ-தரோ அல்லது சிந்துவெளி நாகரிகம்’ என்ற நூலை இயற்றியவர் மா. இராசமாணிக்கனார்”.

8. ‘கோடை மழை’ என்ற சிறுகதையின் ஆசிரியர்

அ) சாந்தா தத் ஆ) ஐராவதம் மகாதேவன்

இ) தோப்பில் முகமது மீரான் ஈ) நெல்லையப்பர்

9. காய்நெல் - சொல்லின் இலக்கணக்குறிப்பு

அ) வினைத்தொகை ஆ) பண்புத்தொகை

இ) உவமைத்தொகை ஈ) இருபெயரொட்டுப் பண்புத்தொகை

10. ‘Teller’ என்ற ஆங்கிலச் சொல்லின் தமிழாக்கம்

அ) கேட்பு வரைவோலை ஆ) விரைவுக் காசாளர்

இ) இணைய வங்கி அமைப்பாளர் ஈ) அஞ்சல் காசாளர்

11. படிமம் என்பதன் பொருள்

அ) சொல் ஆ) செயல் இ) காட்சி ஈ) ஒலி

12. இனநிரை - என்ற சொல்லின் புணர்ச்சி விதி

அ) ஈறுபோதல், இனமிகல்

ஆ) ஈறுபோதல், முன்னின்ற மெய் திரிதல்

இ) மவ்வீறு ஒற்றழிந்து உயிரீறு ஒப்பவும்

ஈ) இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும்.

13. குறியீடுகளைப் பொருத்துக

அ) பெண் - 1) சமாதானம்

ஆ) புறா - 2) வீரம்

இ) தராசு - 3) விளக்கு

ஈ) சிங்கம் - 4) நீதி

அ) 2,4,1,3 ஆ) 2,4,3,1 இ) 3,1,4,2 ஈ) 3,1,2,4

14. தவறான இணையைத் தேர்க :

| பாவகை | | இலக்கியம் |
|---|---|---|
| அ) விருத்தப்பா | - | நாலடியார் |
| ஆ) ஆசிரியப்பா | - | அகநானூறு |
| இ) கலிவெண்பா | - | தூது |
| ஈ) குறள்வெண்பா | - | திருக்குறள் |

**III. (அ) குறுவினா (எவையேனும் மூன்றனுக்கு மட்டும் விடை தருக)** 3x2=6

15. நகரம் பட்டை தீட்டிய வெள்ளை வைரமாகிறது - விளக்கம் தருக.

16. எதிர்பாராத நிகழ்வுகளை ஜலாலுத்தீன் ரூமி எவ்வாறு உருவகப்படுத்துகிறார்?

17. ஒருமுக எழினி, பொருமுக எழினி – குறிப்பு எழுதுக.

18. ‘தருமமிகு சென்னையில் கந்த கோட்டத்துள்வளர் தலமோங்கு கந்தவேளே’ – தொடருக்குப் பதவுரை எழுதுக.

SHRI KRISHNA ACADEMY
Padasalai

**(ஆ) குறுவினா (எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விடை தருக)** 2x2=4

19. ஒலிப்பின்னல் என்பது யாது?

20. அக்காலத்துக் கல்விமுறையில் மனனப் பயிற்சிக்கு உதவிய நூல்கள் எவை?

21. சேய்மைக் காட்சித் துணிப்பு என்றால் என்ன?

**IV. குறுவினா (எவையேனும் ஏழனுக்கு மட்டும் விடை தருக.)** 7x2=14

22. **ஏதேனும் ஒன்றனுக்கு உறுப்பிலக்கணம் தருக.**
அ) சாய்ப்பான் ஆ) ஈந்த

23. **உவமைத் தொடர்களைச் சொற்றொடர்களில் அமைத்து எழுதுக.**
அச்சாணி இல்லாத தேர்போல

24. **ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக.**
அ) ஏழையென ஆ) பெருங்கடல்

25. **வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.**
மாணவர்கள் பெற்றோர்களை தமது நண்பர்களாக பாவித்து நட்புக் கொள்ள வேண்டும். தமது இன்ப துன்பங்களை பெற்றோர்களுடன் பகிர்ந்துக் கொள்ள வேண்டும்.

26. **பொருள் வேறுபாடு அறிந்து வாக்கியத்தில் அமைத்து எழுதுக.**
ஊண் - ஊன்

27. **தொடரில் இடம்பெற்றுள்ள மரபுப் பிழைகளை நீக்கி எழுதுக.**
அ) முருகன் சோறு சாப்பிட்டுப் பால் குடித்தான்.
ஆ) ஆட்டுத் தொழுவத்தைச் சுற்றிலும் எலிகளின் பொந்துகள் அமைத்திருந்தன.

28. **கீழ்க்காணும் தொடர்களில் அடைப்புக்குள் உள்ள பெயர்ச்சொல்லைத் தொடர்களுக்கு ஏற்றவாறு மாற்றி எழுதுக.**
அ) அவர் திறமையானவர் என்று ............ (குமரன்) தெரியும்.
ஆ) நேற்று முதல் --------- (அணை) நீர்மட்டம் உயர்ந்து வருகிறது.

29. **பேச்சு வழக்கை எழுத்து வழக்கமாக மாற்றுக :**
ரவைக்கு சித்தப்பன காவலுக்குப் போவ சொல்.

30. தொன்மம் விளக்குக.

**V. (அ) சிறுவினா (எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விடை தருக)** 2x4=8

31. பழி நாணுதலின் அவசியத்தை வள்ளுவர் எவ்வாறு கூறுகிறார்?

32. "மூன்றான காலம் போல் ஒன்று" – எவை? ஏன்? விளக்குக.

33. எங்கிருந்தோ வருகிறது
வண்ணத்துப்பூச்சியொன்று
பறவைகளும் வரக்கூடும் நாளை - இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக

**(ஆ) சிறுவினா (எவையேனும் இரண்டனுக்கும் மட்டும் விடை தருக)** 2x4=8

34. சங்க காலத்திலேயே ஆண்மையச் சமூக முறை பரவலாகி விட்டதைக் குறித்து விளக்குக.

35. சென்னையின் பண்பாட்டு அடையாளங்களில், இன்றும் நிலைத்து இருப்பனவற்றைக் குறிப்பிடுக.

36. மயிலை சீனி. வேங்கடசாமியின் படைப்புகள் குறித்து எழுதுக.

**VI. எவையேனும் மூன்றனுக்கு விடை தருக (மொழித்திறன் பயிற்சிகள்)** 3x4=12

37. நிரல்நிறை அணியைச் சான்றுடன் விளக்குக.

(அல்லது)

அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க
இகல்வேந்தர்ச் சேர்ந்து ஒழுகுவார் - இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்குக.

SHRI KRISHNA ACADEMY
Padasalai

www.Padasalai.Net www.TrbTnpsc.com

38. **பின்வரும் பாடலைப் படித்துணர்ந்து மையக்கருத்தை எழுதி, ஏற்புடைய நயங்கள் மூன்றனை எடுத்தெழுதுக.**

அந்தியிருளாற் கருகும் உலகு கண்டேன்.
அவ்வாறே வான் கண்டேன், திசைகள் கண்டேன்
பிந்தியந்தக் காரிருள்தான் சிரித்த துண்டோ?
பெருஞ்சிரிப்பின் ஒளிமுத்தோ நிலவே நீதான்
சிந்தாமல் சிதறாமல் அழகை யெல்லாம்
சேகரித்துக் குளிரேற்றி ஒளியும் ஊட்டி
இந்தாவென் றேஇயற்கை அன்னை வானில்
எழில்வாழ்வைச் சித்தரித்த வண்ணந் தானோ
- பாரதிதாசன்

39. **பின்வரும் பழமொழியை வாழ்க்கை நிகழ்வோடு பொருத்தி எழுதுக.**
குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை **(அல்லது)** சிறுதுளிப் பெருவெள்ளம்.

40. உங்கள் பள்ளியில் பயின்ற முன்னாள் மாணவர் தற்பொழுது மாவட்ட ஆட்சியராகப் பணியாற்றுகிறார். நடைபெற இருக்கும் பள்ளி ஆண்டு விழாவில் சிறப்பு விருந்தினராக வர இருக்கும் அவரைப் பள்ளியின் சார்பாக வரவேற்கும் விதமாக ஒரு பக்க அளவில் வரவேற்புரை ஒன்றை எழுதுக.

**VII. (அ) நெடுவினா (இருபது வரிகளில் விடை தருக.)** 2x6=12

41. தமிழின் சீரிளமைத் திறம் வியந்து கவிஞர் சிற்பி பாலசுப்ரமணியம் கூறுவனவற்றைத் தொகுத்து எழுதுக.

(அல்லது)

சென்னையில் உள்ள மயிலாப்பூர், கந்த கோட்டப்பகுதிகள் செய்யுளில் எவ்விதம் காட்சிப்படுத்தப்படுகின்றன?

42. ‘நெகிழி தவிர்த்து நிலத்தை நிமிர்த்து’ என்னும் தலைப்பில் சுற்றுச்சூழல் ஆர்வலர் பசுமை தாசனாருடன் நீங்கள் நடத்திய கற்பனைக் கலந்துரையாடல் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

(அல்லது)

நிருவாக மேலாண்மை குறித்து வெ.இறையன்பு கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

**ஆ) பின்வரும் துணைப்பாடப்பகுதி வினாவிற்கு விடை எழுதுக.** 1x6=6

43. ‘உரிமைத்தாகம்’ கதையில் சகோதரர்கள் இருவரும் ஒன்றிணையாமல் இருந்திருந்தால் ---------- கதையைத் தொடர்ந்து எழுதி முடிக்க.

(அல்லது)

மகாநடிகரைக் கண்ட பாலசந்திரனின் மனவோட்டத்தை நயத்துடன் எழுதுக.

**VIII. அடிபிறழாமல் செய்யுள் வடிவில் விடை தருக** 4+2=6

44. அ) ‘ஓங்கலிடை ---’ எனத் தொடங்கும் தன்னேர் இலாத தமிழ்ப் பாடலை எழுதுக.
ஆ) ‘இல்’ என முடியும் குறள்

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

# SHRI KRISHNA ACADEMY

- **FULL TEST QUESTION PAPERS:**
  X-STD,XI-STD, XII-STD 10 SETS OF FULL TEST QUESTION PAPERS AVAILABLE in ALL SUBJECTS.
- **CREATIVE QUESTIONS :**
  ONE MARKS, TWO MARKS & FIVE MARKS AVAILABLE in ALL SUBJECTS.
- **MATERIALS(GUIDE) FOR**
  X-STD, XI-STD, & XII- STD AVAILABLE in ALL SUBJECTS.
- **ONE MARK TEST QUESTION PAPER**
  X-STD,XII-STD, XII-STD AVAILABLE in ALL SUBJECTS.

→ For MORE DETAILS - 99655 31727 , 94432 31727

SHRI KRISHNA ACADEMY

Padasalai